**இரத்தினபுரி மாநகர சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இரத்தினபுரி மாநகர சபையின் 2020 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளை சட்டத்தின் (252 அதிகாரம்) 2019 பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக்குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான்கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் இரத்தினபுரி மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின. கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மாநகர சபை செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) அதிகாரச்சட்டத்தின 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் இவ்வாண்டு கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் 1.2 (உ) மற்றும் (எ) தவிர முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டினுள் கொள்வனவு செய்யப்பட்ட கூட்டுத் தொகை ரூபா 1,029,400 ஆன நிலையான சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டு இருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக. | நிலையான சொத்துக் கொள்வனவு மூலதனமாக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 14,622,237 ஆன முத்திரைக் கட்டண குறை பில்லிடலிற்காக சீராக்கம் செய்யதிருக்கவில்லை. | கணக்கீடு செய்ய முடியாத குறை பில்லிடலை சரிசெய்வதாக. | குறை பில்லிடலிற்காக செம்மையாக்கல் செய்ய வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டினுள் பன்முகப்படுத்தப்பட்ட ஒதுக்கீட்டின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் பெறுமதி ரூபா 9,593,039 ஆன போதும், ரூபா 10,624,704 பில்லிட்டதன் காரணமாக ஆண்டின் மூலதன வருமானம் மற்றும் ஆண்டின் இறுதியில் நிலுவை மூலதன வருமானம் ரூபா 1,031,665 கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | 2020 ஆண்டில் பன்முகப்படுத்தப்பட்ட வேலைகளுக்காக கூடுதலாக மேற்கொள்ளப்பட்ட பில்லிடலை சரி செய்வதாக. | ஆண்டிற்குரிய பில்லிடலை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 06 வருமான தலைப்புகளிற்குரிய கூட்டுத் தொகை ரூபா 2,023,275 இற்கு வருமான பில்லிடல் மேற்கொள்ளாமையினால் ஆண்டின் செயற்பாட்டு மிகை மற்றும் ஆண்டிறுதி பெறவேண்டிய வருமானங்களின் பெறுமதி சமமான பெறுமதியினால் குறைத்து காட்டப்பட்டன. | குறை பில்லிடலை சரி செய்வதாக. | ஆண்டிற்குரிய பில்லிடலை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டிற்காக சலுபிலிசல கட்டிடத்திற்கு பில்லிட வேண்டிய வருமானம் ரூபா 480,000 ஆன போதும், அதனை ரூபா 2,059,000 ஆக கணக்கீடு செய்தமையால் ஆண்டின் செயற்பாட்டு மிகை ரூபா 1,579,000 கூடுதலாக காட்டப்பட்டது. | எதிர்காலத்தில் சரி செய்ய குறித்துக் கொண்டதாக. | ஆண்டிற்குரிய பில்லிடலை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஊ) | நிதிக்கூற்று பிரகாரம் சபையின் பொதுக் கணக்கில் மீதி மற்றும் பொழிப்புக் காசுப் புத்தக மீதிக்கிடையில் ரூபா 4,297,514 ஆன வித்தியாசத்திற்கான காரணத்தை இனங்காணாது நிரண்ட நிதியத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. | இத் தகவல்களை கண்டறிவது கடினமாக இருந்தது. மேலும் விடயங்களை தேடி முன்நடவடிக்கை எடுப்பதாக. | கணக்கு மீதிகளின் வித்தியாசத்தை இனங்கண்டு சரிசெய்ய வேண்டும். |
| (எ) | மீளாய்வாடிற்காக முன்ஏற்பாட்டு கட்டணம் மற்றும் அனுமதியற்ற சேவைக் கட்டண வருமானம் முறையே ரூபா 685,067 மற்றும் 448,324 வைப்புக் கணக்கிற்கு செலவு வைத்திருந்த காரணத்தால் ஏனைய வருமானம் ரூபா 1,133,391 குறைத்து காட்டப்பட்டது. கடந்த ஆண்டுகளிலிருந்து ஏற்பட்டிருந்த இத் தவறு காரணமாக நிதி நிலமைக் கூற்றில் நடைமுறை பொறுப்புக்கள் ரூபா 10,890,167 கூடுதலாகவும், திரண்ட நிதிய மீதி சமமான பெறுமதியால் குறைத்தும் காட்டப்பட்டன. | 2021 வரவு செலவு திட்டம் பிரகாரம் முன்ஏற்பாட்டு கட்டண வருமானத்தை 30341(iii) பிரகாரம் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2021 வரவு செலவு திட்டம் தயாரிக்கையில் மேலே உப வருமான விடயத்தை உள்ளடக்கி சபை அங்கீகரித்துள்ளதாக. மேலும் அனுமதியற்ற சேவை தண்டப்பண கட்டண வருமான தலைப்பொன்றின் கீழ் கணக்கீடு செய்ய 2021 ஆண்டு நடவடிக்கை எடுக்காததுடன் 2022 ஆண்டு அது தொடர்பாக முன்நடிக்கை எடுக்க குறித்துக் கொண்டதாக. | ஆண்டிற்குரிய வருமான செலவுகளை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டினுள் திட்டமிடற் குழு கொடுப்பனவாக செலுத்திய ரூபா 297,000 வை ஆண்டிற்குரிய செலவாக இனங்காணாது முன்ஏற்பாட்டு கட்டணமாக கணக்கீடு செய்தமையால் ஆண்டின் செயற்பாட்டு செலவு ரூபா 297,000 குறைத்து காட்டப்பட்டது. | 2021 ஆண்டில் திட்டமிடற் குழு கொடுப்பனவு செலுத்துவதற்காக செலவு விடயம் 31459 (10) என செலவு தலைப்பு குறிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அத் தவறை எதிர்காலத்தில் சரிசெய்வதாக | ஆண்டிற்குரிய வருமான செலவுகளை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |

### 1.6.2 அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| 2019 ஆண்டு முதல் 2020 ஆகஸ்ட் வரையான காலத்தினுள் 38 சந்தர்பங்களில் ஒழுங்கான அங்கீகாரமின்றி நோயாளர் போக்கு வரத்திற்காக மற்றும் ஏனைய நோக்கங்களை குறிப்பிட்டு நோயாளர் வண்டியை 3639 கிலோ மீட்டர்கள் செலுத்தியிருந்ததுடன், ஓட்டக் குறிப்பு எழுதாமல் 2581 கிலோ மீட்டர்கள் தூரம் அவ்வண்டியை செலுத்தியிருந்தது. | ஒழுங்கான அங்கீகாரமின்றி செலுத்தியிருந்ததுடன், அதற்காக அங்கீகாரமொன்றை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக மற்றும் ஓட்டக் குறிப்பு புத்தகத்தில் குறிப்பிடாது செலுத்திய சாரதிகளை இனங்கண்டு அவர்களிடமிருந்தது அச் செலவை அறவிட நடவடிக்கை எடுப்பதாக. | அரச சொத்துக்களை தவறான வகையில் பயன்படுத்துவதற்கு உள்ள சந்தர்பங்களை தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், ஏற்பட்டுள்ள துஸ்பிரயோகத்திற்குரிய பணத்தை பொறுப்புதாரர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 571(2) | 1965 ஆண்டு முதல் 2018 ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய கூட்டுத் தொகை ரூபா 9,384,988 ஆன காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் பொது வைப்புக் கணக்கிலிருந்து வருமானத்திற்கு எடுக்க வேண்டிய மீதிகளை வருமானத்திற்கு எடுக்கவும் நானாவித வைப்புக்களை முடியுமான அளவு தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக. | காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | தாபன விதிக் கோவை XIX அத்தியாயத்தின் 5.7 பிரிவு | உத்தியோகபூர்வ இல்லங்களிற்காக 2011 மே முதல் 2020 ஜுன் வரை மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 330,000 ஆன வீட்டு வாடகை அறவிடப்படவில்லை. | தாபன விதிக்கோவை XIX அத்தியாயத்தின் 5.7 பிரிவின் பிரகாரம் உத்தியோகபூர்வ வீட்டு வாடகை எதிர்காலத்தில் அறவிட நடவடிக்கை எடுப்பதாக. | தாபன விதிக்கோவை பிரகாரம் உத்தியோகபூர்வ வீட்டு வாடகை அறவிட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 89,516,436 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 120,052,443 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | வீதவரி மற்றும் குத்தகை | | |
| | 2020 திசெம்பர் 31 திகதி நிலுவை வீதவரி மீதி ரூபா 37,517,503 ஆனதுடன், நிலுவை பணத்தை அறவிட சபையின் செயற்பாடு பலவீன மட்டத்தில் காணப்பட்டது. அவ்வாறே சபையில் காணப்படும் மென்பொருள் தொகுதி மூலம் வீதவரி மீதி தொடர்பான காலப் பகுப்பாய்வொன்றை பெற்றுக் கொள்ள சபைக்கு இயலாதிருந்ததுடன், 1997 ஆண்டு வீதவரி மதிப்பீட்டின் பிரகாரம் வீதவரி அறவிடப்பட்டிருந்தது. | தொற்று நிலைமையின் முன் கடந்த ஆண்டு வரி அறவீட்டு வீதத்தை 67 சதவீதமளவிற்கு பேணிக்கொள்ள எமக்கு முடியுமனதாகவும், வீதவரி அலகில் காணப்படும் 20 வருடகால பழமையான மென்பொருளின் மூலம் வீதவரி நிலுவை மீதிகளை காலப் பகுப்பாய்வு செய்து பெற்றுக் கொள்ளும் இயலுமை இல்லாததாக மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படுவதாக. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை தாமதமின்றி அறவிட வேண்டும். |
| (ஆ) | நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் | | |
| | மாகாணசபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்து 2020 திசெம்பர் 31 திகதியன்று பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 8,316,185 ஆனதுடன் 2020 மே முதல் திசெம்பர் வரை அறவிட வேண்டிய முத்திரைக் கட்டண பெறுமதியை இனங்கண்டிருக்கவில்லை. | ஆண்டிற்குரிய முத்திரைக் கட்டணத்தை கணக்கிட்டு பெற்றுக் கொள்ள வரிசை அமைச்சுடன் செயற்படுவதாகவும். | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் | | |
| | 1988 இன் 56 இலக்க மற்றும் 2000 இன் 53 இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 இலக்க தேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட பிரமாணங்கள் பிரகாரம் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக் | சுற்றாடல் உத்தியோகத்தர் வெற்றிடத்தை பூர்த்தி செய்துள்ளதால் உரிய முறையில் சுற்றாடல் அனுமதிப் பத்திரம் வழங்களை நாளாது வரையாக்க நடவடிக்கை எடுப்படுவதாக. | தேசிய சுற்றாடல் சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

கொள்ளாத கைத்தொழில்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும், சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டிய 25 கைத்தொழில்கள் சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளாமை மற்றும் 44 நிறுவனங்கள் அனுமதிப் பத்திரங்களை புதுப்பிக்காமை தொடர்பாக சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன் காரணமாக சபைக்கு ரூபா 276,000 வருமானமொன்று இலக்கப்பட்டிருந்ததுடன் அக் கைத்தொழில்கள் மூலம் ஏற்படும் சுற்றாடல் தாக்கம் தொடர்பாக காலரீதியான கணிப்பீடொன்று மேற்கொண்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2007 ஆண்டில் சபைக்கு சுவீகரித்திருந்த 02 காணித் துண்டுகளை ஏனைய காணிக்காக மாற்றிக்கொள்ளல் 2010 ஜுன் 28 திகதி பொதுச் சபை அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும், ஒப்படை தளக்கோல பத்திரத்தின் பிரகாரம் 147 பர்சஸ்கள் மாத்திரம் சுவீகரிக்கப்பட்டிருந்தது. காணி பரிமாற்றத்துடன் தொடர்பான இரண்டு நபர்களினால் இக் காணிக்கு அன்மித்த காணியில் 06 மாடிகளுடன் கூடிய அனுமதியற்ற கட்டிடமொன்றை நிர்மாணித்துக் கொண்டிருந்ததுடன், அதன் காணி பிரிப்பு திட்டத்தை 2007 ஆண்டு அரசிற்கு சுவீகரித்த 67 பர்சஸ் அளவையும் உள்ளடங்கும் வகையில் மாநகர சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. தேசிய கட்டிடங்கள் ஆராய்சி அமைபினால் காணி தகைமை சான்றிதழ் ஒன்றை 2013 ஏப்ரல் 04 திகதி வழங்கியிருந்த போதும், நிலக்கீழ் மாடியுடன் 06 மாடிகளுடனான கட்டிடமொன்று கட்டமைப்பு ரீதியாக நிர்மாணிக்கப்பட்டுள்ளதால் கட்டிடத்தின் நிர்மாணங்களை தொடர்ந்தும் மேற்கொண்டால் தரையிறக்க பரிசோதனை | மீண்டும் எல்லைகளை திறந்து அளவை செய்யுமாறு பிரதேச செயலகத்திலிருந்து கோரிக்கை ஒன்று விடுக்கப்பட்ட போதும், இது வரை அது இடம்பெறவில்லை எனவும், அங்கீகாரம் வழங்கியுள்ள திட்டம் தொடர்பாக எதிர்காலத்தில் அளவையை சபைக்கு அறிக்கையிடுவதாக மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளரினால் இக் கட்டிட திட்டம் அங்கீகாரத்திற்காக சிபாரிசு செய்துள்ளதாக மற்றும் அறவிட வேண்டிய தண்டப் பணத்தை அறவிடுவதற்காக | சபைக்கு உரித்தான காணித் துண்டை பெற்று உரிமையை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் செயன்முறையை ஒழுங்குபடுத்தல், காணித் பிரிப்பு திட்டத்தை அங்கீகரிக்கும் போது அலுவலர்கள் கவனயீனமாக செயற்படுவது தொடர்பாக கண்டறிதல், சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை உரிய முறைப்படி அறவிடவும் |

| | | | |
|---|---|---|---|
| | ஒன்றை செய்து திட்டத்தின் அளவுருவை உறுதி செய்ய வேண்டுமென நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந் நிபந்தனைகளை கவனிக்காது சபை அபிவிருத்தி அனுமதிப்பத்திரத்தை விநியோகித்திருந்தது. குறித்த கட்டிடத்திற்கு தொடர்பான அனுமதியற்ற சேவைக் கட்டணமாக ரூபா 8,830,000 அறவிட வேண்டிய போதும், அதற்காக சபையினால் ரூபா 100,000 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுக்கவில்லை எனவும். | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | வெளித்தரப்பினரால் நிர்மாணித்திருந்த 03 கட்டிடங்களிற்கான காணிகளின் பிரிப்புத் திட்டத்தை அங்கீகரிக்கும் போது சபைக்கு சொந்தமான காணியின் ஒரு பகுதியும் உள்ளடங்கும் வகையில் மாநகர சபையினால் 2017 ஆகஸ்ட் 02 திகதி அப்பிரிப்பு திட்டத்தை அங்கீகரித்திருந்தது. அங்கு அனுமதியற்றவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுப்பது பிரச்சினைக்குரியதாக இருந்ததுடன், அக் காணித்துண்டை உரிய தரப்பினருக்கே காணிக் குத்தகை அடிப்படையில் வழங்க 2019 ஒக்டோபர் 08 திகதி சபை தீர்மானித்திருந்தது. எவ்வாறாயினும், சபைக்கு சொந்தமான காணி உள்ளடங்கும் வகையில் வெளித் தரப்பினருக்கு காணி பிரிப்பு திட்டத்தை அங்கீகரித்து வழங்கியமை தொடர்பில் பொறுப்புவாய்ந்தவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்ட நடவடிக்கை எடுக்க எதிர்காலத்தில் செயற்படுவதாக. | நகர சபையின் சொத்துக்களை துஸ்பிரயோகத்திற்கு இடமளிப்பது தொடர்பில் திட்டமிடல் குழு அங்கத்தவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மாநகர சபைக்கு சொந்தமான கனாதொல இயற்கை பசளை கொட்டிலின் இடி தாக்கி கருவியை பொருத்த தொழிநுட்ப ஆய்வுக் குழு தலைவரினால் இணையத்தினூடாக இனங்கண்ட 05 நிறுவனங்களை பெயரிட்டு விலைமனு கோரப்பட்டிருந்தது. தொழிநுட்ப ஆய்வுக் குழு சிபாரிசின் பெயரில் வெட் வரி உள்ளடங்களாக ரூபா 990,525 பெறுமதிக்கு பெறுகைகள் ஒப்படைத்திருந்த நிறுவனம் தவிர ஏனைய நிறுவனங்கள் இடி தாக்கி கருவி வழங்காத நிறுவனங்கள் என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் பெறுகை ஒப்படைக்கும் நோக்கில் விலை மனு முன்வைத்த நிறுவனத்திலிருந்து மற்றும் இடி தாக்கி கருவி வழங்காத 04 நிறுவனங்களிலிருந்து கேள்வி மனு கோரி டென்டர் ஒப்படைக்கப்பட்டிருந்தது. | இரண்டு சந்தர்ப்பங்களில் விலை மனு கோரிய போதும், ஒரு நிறுவனம் மாத்திரம் கேள்வி மனு முன்வைத்தாகவும், கொள்வனவு செய்தமையால் சபைக்கு நட்டம் ஏற்படவில்லை என. | பண்டங்களை கொள்வனவு செய்கையில் பெறுகைகள் வழிகாட்டி பிரகாரம் சாதாரண போட்டியிற்குட்படுத்தி பொருத்தமான டென்டர்தாரரை தெரிவு செய்ய வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| சபை அதிகார எல்லையில் மீளாய்வாண்டில் 16,200 மெட்டிக் டொன் அளவான திண்ம கழிவுப் பொற்களை வெளியிட ரூபா 17,766,972 ஆன செலவு, 160 ஆளணி ஊழியர்களும் 21 வாகனம் மற்றும் இயந்திரங்களும் பயன்படுத்தப்பட்டிருந்தன. ஒன்று திரட்டும் கழிவுப் பொருட்களில் 65 இற்கும் 62 சதவீத அளவு சேதன பசளை உற்பத்திக்காக பயன்படுத்திய பின்னர் எஞ்சுகின்ற 35 இற்கும் 38 சதவீதத்திற்கும் இடையிலான அளவும், பிணியற்ற வைத்தியசாலை கழிவுகள் மாதத்திற்கு 27 டெக்டர் அளவும், இறைச்சி, மீன் வியாபார நிலையங்களிலிருந்து அகற்றும் கழிவுகள் உள்ளடங்களாக கணிசமான கழிவுப் பொருட்கள் ஒழுங்காக மற்றும் சூழல் நேயமற்ற திறந்த சூழலிற்கு வெளியிடுவதால் பல சுற்றாடல் பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தன. | அம்மத்திய நிலையத்தில் திண்மக் கழிவு முகாமை செயற்பாடு தொடர்ந்து செயற்படும் மனித செயற்பாட்டுடன் இணைந்த செயன்முறையாகையால் முடியுமான எல்லா சந்தர்ப்பங்களிலும் உச்ச வினைத்திறனுடன் கொண்டு செல்லும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக. | கழிவுகளை திறந்த சூழலிற்கு வெளியிடுவதால் ஏற்படும் சுற்றாடல் பாதிப்பை குறைத்துக் கொள்ள வேண்டும். |